**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

I.P.No.5/2024

பெயர்:– எஸ்.துரைசாமி நாள்: 27.10.2025

ம.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின்பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை :– (3,4 எதிர்மனுதாரர்கள் தரப்பில்)

நான் யார் கூறி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ஆறுமுகம் சொன்னதன் பேரில் சாட்சி அளிக்க வந்துள்ளேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகளுக்கு யார் விபரம் கூறினார் என்றால் நான்தான் கூறினேன். நான் எந்த வருடத்தில் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் 30.03.2020. யாருடைய வீட்டில் வைத்து சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் ஆறுமுகம் வீட்டில் வைத்து சாட்சி கையொப்பம் செய்தேன். அப்பொழுது என்னோடு யார் யார் இருந்தார்கள் என்றால் கிருஷ்ணசாமி, பெரியசாமி, ஆறுமுகம் இருந்தார்கள். யார் யாருக்கு எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்றால் ஆறுமுகம் பெரியசாமிக்கு ரூ. 2 லட்சம் கொடுத்தார். ஆறுமுகம் என்னை சாட்சியாக இருக்க சொன்னாரா என்றால் இல்லை. பெரியசாமி தான் என்னை சாட்சியாக இருக்க அழைத்தார். பெரியசாமி எனது உறவினரா என்றால் இல்லை. எனது பக்கத்து ஊர். நான் கையொப்பம் தமிழில் போடுவேனா ஆங்கிலத்தில் போடுவேனா என்றால் ஆங்கிலத்தில் தான் போடுவேன். பெரியசாமி எத்தனை கையொப்பம் செய்தார் என்றால் ஸ்டாம்பில் ஒரு கையொப்பம் அதன்கீழே ஒரு கையொப்பம் செய்தார். வழக்கு புரோ நோட்டை நான் பார்த்தேனா என்றால் அன்று பார்த்தது தான் அதன் பின் பார்க்கவில்லை. தாவா புரோ நோட்டு 2000 வருடத்திற்கு முந்தையது என்றால் எனக்கு தெரியாது. சிவில் நீதிமன்றத்தில் ஆறுமுகம் பெரியசாமி மீது வழக்கு போட்டதற்கு நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கு ஆறுமுகம் எதற்காக தாக்கல் செய்தார் என்றால் பணத்திற்காக போட்டார். பெரியசாமிக்கு சொத்து இருக்கிறதா என்றால் காடு இருந்தது விற்றுவிட்டார் என்று சொன்னார்கள் எனக்கு தெரியாது. பெரியசாமிக்கு மாதம் ரூ.30,000 வருமானம் வருமா என்றால் எனக்கு தெரியாது. சைக்கிள் ஸ்டாண்ட் டவுனில் வைத்துள்ளார். வருமானம் வரலாம். அவருக்கு நிறைய நிலங்கள் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. சொத்தை விற்பனை செய்யும்போது தொகையை பெற்றுக்கொண்டுதான் விற்பனை செய்வார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் மனு சொத்து என்பதாக எந்த சொத்து காட்டப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. பெரியசாமி விற்பனை சொத்தினை முறியடிப்பதற்காக ஆறுமுகமும் பெரியசாமியும் சேர்ந்து கொண்டு மோசடியாக தயார் செய்துள்ள புரோ நோட்டில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன்

P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2025.10.27 17:30:13 +0200

## Copy of Deposition

என்றால் சரியல்ல. புரோ நோட்டை எழுதியது என்றால் கிருஷ்ணசாமி எழுதினார். அவர் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

| |
|---|
| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br><br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.10.27 17:30:18 +0200<br><br>Subordinate Judge,<br>Kodumudi |